بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 14/08/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் அவர்களைப்பற்றி கூறிவந்தேன். அவர்களைக் குறித்தே இன்றும் மேற்கொண்டு விஷயங்களை எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குறிப்பான தோழர்களுள் ஒருவராக இருந்தார். ஹஸ்ரத் உமர் அவர்கள் தம்முடைய கிலாஃபத் காலகட்டத்தில் அவரை ஈரானிய படைக்கெதிராக இஸ்லாமிய படைக்குத் தளபதியாக நியமித்து இருந்தார்கள். ஏதேச்சையாக அவருடைய தொடையில் ஒரு கட்டி வந்தது. அது நீண்ட காலமாக இருந்தது. எவ்வளவோ சிகிச்சை செய்தும் எவ்வித பலனும் இல்லை. இறுதியில் அவர்கள் என்ன நினைத்தார்கள் என்றால் நான் கட்டிலில் படுத்திருந்தால், படைத்தளபதி தம்முடன் இல்லை என்பதை படை பார்க்கும்; அவர்கள் மனமுடைந்து போவார்கள். ஆகவே ஹஸ்ரத் சஅது அவர்கள் ஒரு மரத்தின் மீது மிக உயர்வான மேடை ஒன்று அமைத்தார்கள். முஸ்லிம்களுடைய படை அன்னாரை கண்டு வரவும், தளபதி தன்னுடன் இருப்பதாக அவர்கள் நினைத்துக்கொள்ளும் வகையிலும் ஹஸ்ரத் சஅது அவர்கள் மக்களுடைய உதவியுடன் அதில் அமர்ந்து கொள்வார்கள்.

அந்நாட்களில்தான் ஒரு அரபு தலைவர் மது அருந்தியதாக அன்னாருக்கு தகவல் வந்தது. மது அருந்திய காரணத்தினால் அன்னார் அவரை கைது செய்திருந்தார்கள். சந்தேகத்திற்கிடமின்றி அந்நபரிடத்தில் பலவீனம் இருந்தது. அவர் மது அருந்தி இருந்தார். ஆனால் அவர் பெரும் வீரராக இருந்தார். அவரிடத்தில் உத்வேகம் காணப்பட்டது. போரில் முஸ்லிம்கள் அடைந்த நஷ்டங்களைப் பற்றி கேட்ட பிறகு, கூண்டுக்குள் சிங்கம் உலாவுவதைப் போன்று அறைக்குள் அவர் உலாவிக் கொண்டிருப்பார். உலாவியவாறே ஒரு கவிதையும் படிப்பார். அந்த கவிதையினுடைய பொருள் என்னவென்றால், **“இன்றுதான் நீ இஸ்லாத்தை காப்பாற்றக்கூடிய நாளாகும்! உம்முடைய வீர சாகசத்தை காட்டக்கூடிய தருணமாகும்! ஆனால் நீயோ கைதியாக இருக்கின்றாய்.”**

ஹஸ்ரத் சஅது அவர்களின் மனைவி தைரியமிக்க பெண்மணியாக இருந்தார்கள். ஒருநாள் அவர்கள் அந்த கவிதையை செவியுற்றார்கள். அந்த கைதியை பார்த்து உங்களை ஹஸ்ரத் சஅது அவர்கள் கைது செய்திருப்பதை நீங்கள் அறிவீர்களா? நான் உங்களை விடுதலை செய்தால் அவர் என்னை ஒருபோதும் விட மாட்டார். ஆனால் உங்களை விடுதலை செய்ய எனது உள்ளம் நாடுகிறது. இதன் மூலமாக நீங்கள் உங்களது விருப்பத்திற்கேற்ப இஸ்லாத்திற்கு உபயோகம் செய்யலாம் என்று கூறினார்கள். ‘போர் நடைபெறும் போது என்னை நீங்கள் விடுவித்து விடுங்கள். போருக்குப் பிறகு உடனடியாக

நான் திரும்பி இந்த அறைக்குள் வந்து விடுவேன்' என்று அந்தக் கைதி வாக்குறுதி கொடுத்தார். அந்த பெண்மணியினுடைய உள்ளத்திலும் இஸ்லாத்திற்காக வேதனை இருந்தது; இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக உத்வேகம் காணப்பட்டது. ஆகவே அவர்கள் அந்த மனிதரை விடுவித்தார்கள். அவர் போரில் கலந்து கொண்டார். மேலும் எந்த அளவு அஞ்சாமல் போர் செய்தார் என்றால், அவருடைய வீரத்தின் காரணமாக இஸ்லாமிய படை பின் வாங்குவதற்கு பதிலாக முன்னேறியது. ஹஸ்ரத் சஅது அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள்.

மது அருந்தியதன் காரணமாக நான் சிறையில் அடைத்த மனிதரும் இன்றைய போரில் இருந்தார். அவர் தனது முகத்தை மறைத்திருந்தார். ஆனால் அவர் போர் செய்யக் கூடிய முறை மற்றும் அவருடைய உயரத்தைக் கொண்டு நான் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். அந்த நபரை சிறையிலிருந்து விடுவித்த நபரை தேடிச்சென்று நான் அவருக்கு கடும் தண்டனை கொடுப்பேன் என்று ஹஸ்ரத் சஅது கூறினார். ஹஸ்ரத் சஅது இந்த சொற்களை கூறியவுடன் அவரது மனைவிக்கு கோபம் வந்துவிட்டது. அவரது மனைவி அவரை பார்த்து, உங்களுக்கு வெட்கம் இல்லையா? நீங்கள் மரத்தில் மேடை அமைத்து உட்கார்ந்திருக்கிறீர்கள். எதிரியினுடைய படைக்குள் அச்சமின்றி நுழையக்கூடிய, தனது உயிரைப் பற்றி அக்கறை கொள்ளாத ஒரு மனிதரை நீங்கள் சிறையில் அடைத்து இருக்கிறீர்கள். நான்தான் அந்த மனிதனை சிறையிலிருந்து விடுவித்தேன். நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பெண்களுக்கு ஆற்றிய ஒரு சொற்பொழிவில் எடுத்துக் கூறினார்கள். **பெண்கள் இஸ்லாத்திற்காக பெரும் பெரும் பணிகளை செய்துள்ளார்கள். ஆகவே இன்றும் அஹ்மதிப் பெண்கள் இந்த முன்மாதிரிகளை தமக்கு முன்னால் வைக்க வேண்டும் என்று கூறினார்கள்.**

காதிஸிய்யாவை வெற்றி கொண்ட பிறகு இஸ்லாமியப்படை பாபிலோனையும் வெற்றிகொண்டது. பிறகு இந்த போரிலேயே மதாயினும் வெற்றி கொள்ளப்பட்டது. **இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஹ்ஸாப் போரின் போது கூறிய அந்த முன்னறிவிப்பு நிறைவேறியது.**

அதன் பிறகு ஹஸ்ரத் சஅது அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் கடிதம் எழுதி மேலும் முன்னேறுவதற்கான அனுமதியை வேண்டினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள் தற்போது இங்கேயே நிறுத்திக்கொள்ளலாம். வெற்றி கொண்ட இடங்களை ஒழுங்குபடுத்துவதின் பக்கம் கவனம் செலுத்துமாறு கூறினார்கள். ஆகவே ஹஸ்ரத் சஅது அவர்கள் மதாயினை தலைமை இடமாக ஆக்கி ஒழுங்குபடுத்த ஆரம்பித்தார்கள். மேலும் இப்பணியை சிறப்பாக செய்தார்கள். பொதுமக்களுடைய வசதிகளுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் தனது நல்ல திட்டம் மற்றும் நற்செயலின் மூலமாக அல்லாஹ் அன்னாருக்கு போர் திறனுடன் நிர்வாகத் திறனையும் வழங்கியதை நிரூபித்தார்கள்.

மதாயினுடைய தட்பவெப்ப நிலை அரேபியர்களுடைய உடல் நிலைக்கு பொருந்தவில்லை. ஆகவே ஹஸ்ரத் சஅது அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய அனுமதியுடன் கூஃபா என்ற பெயரில் ஒரு புதிய நகருக்கான அடித்தளமிட்டார்கள். அதில் பல்வேறு அரபு கோத்திரங்களை தனித்தனி வட்டாரத்தில் வசிக்கச் செய்தார்கள். நகரின் நடுவில் மிகப்பெரிய பள்ளிவாசலைக் கட்டினார்கள். அதில் ஒரே நேரத்தில் 40,000 பேர் தொழ முடியும்.

ஹிஜிரி 23 ஆம் ஆண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது கொலை தாக்குதல் நடத்தப்பட்ட போது, உங்களுக்கு பிறகு கிலாஃபத்துக்காக ஒருவரை தேர்வு செய்யுங்கள் என்று மக்கள் கூறினார்கள். இதனடிப்படையில் ஹஸ்ரத் உமர் அவர்கள் கிலாஃபத்தை

தேர்ந்தெடுக்கும் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அதில் ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ், ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம், ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் ஆகியோர் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், இவர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவர்களை சொர்க்கவாசிகள் என்று கூறியிருக்கிறார்கள். சஅது பின் அபீ வக்காஸ் அவர்களுக்கு கிலாஃபத் கிடைத்து விட்டால் அவர் கலீஃபாவாக இருப்பார். இல்லையென்றால் உங்களில் எவர் கலீஃபாவாக இருப்பாரோ அவர் ஹஸ்ரத் சஅது அவர்களிடமிருந்து ஒத்தாசை பெற்றுக் கொள்ளட்டும் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் குழப்பம் ஆரம்பித்தபோது அந்த குழப்பத்தை வீழ்த்துவதற்காக சஹாபாக்கள் செய்த அழகிய முயற்சியை பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

சஹாபாக்கள் தற்போது ஹஸ்ரத் உஸ்மான் அவர்களிடத்தில் ஒன்று சேர்வதற்கு வாய்ப்பு தரப்படாமல் இருந்தார்கள். ஆயினும் அவர்கள் தங்களது கடமையிலிருந்து கவனமற்றவர்களாக இருக்கவில்லை. காலத்தின் அருமையை கருத்தில் கொண்டவாறு அவர்கள் **இரண்டு பிரிவுகளாக தமது வேலைகளைப் பிரித்துக் கொண்டார்கள். தமது ஒழுக்கத்தினுடைய தாக்கம் பொதுமக்களின் மீது அதிகமாக இருந்த வயது முதிர்ந்த சஹாபாக்கள் மக்களுக்கு புரியவைப்பதற்காக தமது நேரங்களை செலவழித்தார்கள். மேலும் எவர்களுக்கு இவ்வாறான தாக்கம் இருக்கவில்லையோ அல்லது இளைஞர்களாக இருந்தார்களோ அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களை பாதுகாப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். முதலில் கூறப்பட்ட பிரிவில் ஹஸ்ரத் அலீ மற்றும் பாரசீகத்தை வெற்றி கொண்ட ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் ஆகியோர் குழப்பத்தை குறைப்பதற்கு எல்லோரையும் விட அதிகமாக முயற்சி செய்துகொண்டிருந்தார்கள்.** ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கு பிறகு ஹஸ்ரத் அலீ அவர்களுடைய கிலாஃபத்திலும் ஹஸ்ரத் ஸஅத் அவர்கள் தனிமையை மேற்கொண்டிருந்தார்கள். ஒரு அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் அலீ மற்றும் அமீர் முஆவியாவுக்கிடையில் கருத்து வேறுபாடு அதிகரித்தபோது அமீர் முஆவியா அவர்கள் மூன்று சாஹாபிகளுக்கு கடிதம் எழுதி அலீ அவர்களுக்கு எதிராக தமக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். ஒருவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர், இரண்டாமவர் ஹஸ்ரத் சஅது பின் அபி வக்காஸ், மூன்றாமவர் முஹம்மத் பின் மஸ்லமா ஆகியோர் ஆவார்கள். அப்போது மூன்று பேருமே மறுத்து விட்டார்கள்.

ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. **ஒருமுறை அமீர் முஆவியா அவர்கள் ஹஸ்ரத் சஅது அவர்களிடம் அலீக்கு எதிராக நீங்கள் ஏன் ஏசிப் பேசுவதில்லை? உங்களை என்ன விஷயம் தடுக்கிறது? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் சஅது அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய மூன்று விஷயங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று எனக்கு கிடைத்திருந்தாலும் சிகப்பு ஒட்டகங்கள் கிடைத்ததை விட நான் அதிக மகிழ்ச்சியடைந்திருப்பேன்.** அந்த மூன்று விஷயங்களின் காரணமாக நான் ஹஸ்ரத் அலீயை ஏசிப்பேசுவதில்லை. **முதல் விஷயம் என்னவென்றால்,** ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு போருக்கு செல்லும் போது தமக்குப் பின்னால் ஹஸ்ரத் அலீயை விட்டுச் சென்றார்கள். அப்போது அலீ (ரலி), குழந்தைகளையும் பெண்களையும் கவனித்துக் கொள்வதற்காகவா என்னைவிட்டுச் செல்கிறீர்கள்? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், மூஸாவிடம் ஹாரூன் இருந்த அந்தஸ்தில் என்னிடம் நீங்கள் இருப்பதை விரும்பவில்லையா? ஆயினும், ஒரு வேறுபாடு

என்னவெனில், எனக்குப் பிறகு உமக்கு நுபுவ்வத்தின் அந்தஸ்து கிடைக்காது என்று கூறினார்கள்.

**இரண்டாவது விஷயம் என்னவென்றால்,** கைபர் போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை கூறினார்கள்: நான் எப்படிப்பட்ட மனிதருக்கு இஸ்லாமிய கொடியை கொடுப்பேன் என்றால், அவர் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்க கூடியவராக இருக்கிறார்; மேலும் அல்லாஹ்வும் அவனது தூதரும் அவரை நேசிக்கின்றனர் என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் கொடியை அலீக்கு கொடுத்தார்கள். அல்லாஹ் அந்நாளில் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். **மூன்றாவது விஷயம் என்னவென்றால்,**

فَقُلْ تَعَالَوْا نَدْعُ اَبْنَآءَنَا وَاَبْنَآءَكُمْ وَنِسَآءَنَا وَنِسَآءَكُمْ

“நீர் கூறுவீராக! வாருங்கள் நாங்கள் எங்களுடைய ஆண் மக்களையும் நீங்கள் உங்கள் ஆண் மக்களையும், நாங்கள் எங்கள் பெண் மக்களையும் நீங்கள் உங்கள் பெண் மக்களையும் அழைத்துக் கொள்வோம்.” (திருக்குர்ஆன் 3:62) என்ற வசனம் இறங்கிய போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் ஃபாத்திமா, ஹஸ்ரத் ஹஸன் மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் ஆகியோர்களை அழைத்தார்கள். மேலும், அல்லாஹ்வே! இவர்கள் எனது குடும்பத்தினர் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் அவர்களுடைய மகன் முஸ்அப் பின் ஸஅத் அறிவிக்கிறார்கள்: எனது தந்தை மரணம் அடையும் போது அவருடைய தலை எனது மடியில் இருந்தது. எனது கண்களில் நீர் நிரம்பியிருந்தது. அவர் என்னைப் பார்த்து, எனது அன்பிற்குரிய மகனே! என்ன விஷயம் உன்னை அழ வைக்கிறது? என்று கேட்டார்கள். அதற்கு நான், உங்களுடைய மரணத்தைப் பற்றிய துக்கம் ஆகும்; மேலும் உங்களுக்கு பிறகு உங்களுக்கு மாற்றாக நான் யாரையும் காண்பதில்லை என்று கூறினேன். இதற்கு அவர்கள், **எனக்காக அழ வேண்டாம். அல்லாஹ் எனக்கு ஒருபோதும் தண்டனை தர மாட்டான். நான் சொர்க்கவாசிகளைச் சார்ந்தவன் ஆவேன்** என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் அவர்கள் ஹிஜ்ரி 55 ஆம் ஆண்டில் மரணமடைந்தார்கள். மரணமடையும் போது அன்னாருடைய வயது 70 ஐ விட கொஞ்சம் அதிகமாக இருந்தது என்று கூறப்படுகிறது. மதீனாவின் ஆளுநராக இருந்த மர்வான் பின் ஹகம் என்பவர் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். **அன்னாருடைய ஜனாஸா தொழுகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவிமார்களும் கலந்து கொண்டார்கள்.** ஜன்னத்துல் பகீயில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவிமார்கள் செய்த இச்செயலைக் குறித்து சிலர் குறை கூறினார்கள். இதைக் கேள்விப்பட்ட ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள், பள்ளிவாசலில் ஜனாஸா கொண்டுவரப்பட்டது என்று மக்கள் எங்கள் மீது ஆட்சேபனை செய்திருக்கிறார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுஹைல் பின் பய்ஸா என்பவருடைய ஜனாஸா தொழுகையை பள்ளிவாசலுக்குள்தான் நடத்தினார்கள் என்று கூறினார்கள்.**

சஅது அவர்கள் பல்வேறு காலகட்டத்தில் 9 திருமணங்கள் செய்திருந்தார்கள். அவர்களின் மூலமாக அல்லாஹ் அன்னாருக்கு 34 பிள்ளைகளை வழங்கினான். 17 ஆண் பிள்ளைகளும் 17 பெண் பிள்ளைகளும் இருந்தார்கள்.

**குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள்** மதிப்பிற்குரிய ஸஃப்தர் அலி குஜ்ஜர் சாகிப், மதிப்பிற்குரிய இஃப்பத் நசீர் சாஹிபா, மதிப்பிற்குரிய அப்துல் ரஹீம் சாக்கி சாஹிப், மதிப்பிற்குரிய சயீது அஹ்மது செஹ்கள் சாஹிப் **ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். ஜுமுஆ** தொழுகைக்கு பிறகு இவர்களின் **ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்.** *(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)*